DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-209/2022

Prosecution witness – PW 1

| | | |
|---|---|---|
| Name | : திரு.லிங்கேஸ்வரன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1, A2 present.)

05.03.2026 – 01.05 PM

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் சாயல்குடியில் குடியிருந்து நியூஸ் ஜே என்ற பத்திரிக்கையில் நிருபராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 5 ஐ எனக்கு தெரியும்.

2. சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் எனது வீட்டின் முன்பு யாரோ இரண்டு நபர்கள் அசிங்கமாக பேசிக்கொண்டு இருந்துள்ளார்கள். எனது மனைவி என்னிடம் கூறியதன் பேரில் நான் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். . புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆகும். புகார் மனுவில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

<u>பிறழ் சாட்சி:-</u>

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: -</u>**

கடந்த 17.03.2020ம் தேதி மாலை 07.00 மணியளவில் நான் வீட்டில் இல்லாத நேரத்தில் என்னுடைய வீட்டின் முன்னால் எனது மனைவியை பார்த்து ஆஜர் எதிரிகள் அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தது சம்மந்தமாக நான் சாயல்குடி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன்

என்றும், புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும்  சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதால் எதிரிகளுடன் சமதாதானம் செய்து கொண்டு எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.05 18:45:13 +0530